

5

# கருவூர்-வஞ்சி

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்து[illegible]

கருவூர்-வஞ்சி

டாக்டர் இரா. நாகசாமி

அட்டைப்படம் :

நெல்லை மாவட்டம் திருப்புடைமருதூர் ஓவியத்தில் "கருவூர்த் தேவர்" படம்.

முதற்பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. எண். 52

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்கள்

# கரூர் ரோமானியக் காசுகள்

ரோமானியரது வாணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில் ஏராளமான ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன தென்னிந்தியாவில் ரோமானியக் காசுகள் கிடைத்துள்ள இடங்களைக் குறித்தால் பெரும்பாலான இடங்கள் கரூரைச் சுற்றி யுள்ள கோவை மாவட்டப் பகுதிகளிலேயே உள்ளதைக் காணலாம். கரூரில் மட்டும் சுமார் 60, 70 ஆண்டுகளுக்கு முன்னரே 000க்கும் மேற்பட்ட ரோமானியக் காசுகள் பூமிக்கடியில் இருந்து இரு முறை கிடைத்துள்ளன. கரூரிலும் அதைச் சுற்றி யுள்ள பகுதியிலும் இவ்வளவு ரோமானியக் காசுகள் கிடைப்பதிலிருந்து கரூர் முதல் நூற்றாண்டில் எவ்வளவு சிறந்த நகராக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

# தொல்லியல் ஆய்வு

கரூரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வாய்வு மேற்கொண்டுள்ளது. இதிலிருந்து இங்குச் சில புதிய சான்றுகள் கிடைத்துள்ளன. சங்ககால எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் இங்கு கிடைத்துள்ளன. உயர்ந்த மணிகள் சில கிடைத்துள்ளன. பெரிய செங்கல்லால் ஆன கட்டிடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக இங்கு இரண்டே குழிகளில் ரோமானிய மதுக் குடங்களின் பகுதிகள் பல கிடைத்துள்ளன. ரோமானிய நாட்டுடன் திருச்சிக் கரூர் எந்த அளவிற்கு நெருங்கி வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தது என அவை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இதுபோன்ற ரோமானிய மதுக் குடங்கள் தமிழகத்துக்கு கி.பி. 1,2,3-ம் நூற்றாண்டுகளில் கொண்டு வரப்பட்டன

---

வரலாற்றுக்குத் தொண்டு புரியும் துறை

**தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை**

# கருவூர் - வஞ்சி

தமிழக வரலாற்றில் கருவூர் இன்றியமையாத இடத்தை வகித்து வந்துள்ளது. அது ஆன்பொருநை ஆற்றங்கரையில் அமைந்து விளங்கியது. ஆதலின் அது ஆற்றங்கரை நாகரிகம் தோன்றிய காலத்தில் நகராக ஆகியிருத்தல் வேண்டும். இக்கருவூரே சங்ககாலச் சேர மன்னர்களின் தலைநகர். இதுவே வஞ்சி எனவும் பெயர் பெற்றிருந்தது.

சங்க காலத் தொடக்கத்திலிருந்தே கருவூர்-வஞ்சி, ஒரு பெருநகராகத் திகழ்ந்தது. இதைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முதல் மன்னன் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இலக்கியம், கல்வெட்டுகள், ரோமானியக் காசுகள், அகழ்வாய்வு முதலிய அனைத்துச் ான்றுகளும் கரூரின் தொன்மையை மக்குக் கூறுகின்றன. அவ்வரலாற்றின் ரு கண்ணோட்டம் இது.

# புகளூரில் குகைகள்

கருவூரின் வரலாற்றை அறிந்துகொள்ள மிகவும் இன்றியமையாதவை, புகளூர்க் கல்வெட்டுகள் ஆகும். இவை கரூருக்கு அருகில் ஆறுநாட்டார் மலை என்னும் குன்றில் உள்ளன. இக்குன்று மிகவும் தொன்மையானது. காலத்திலிருந்தே சமண முனிவர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்து வந்துள்ளது. இம்மலை கிழக்கு மேற்காக நீண்டுள்ளது. அதன் தென்புறமும் வடபுறமும் இயற்கையமைந்த குகைத் தளங்கள் உள்ளன.

இவற்றில் வடபுறமுள்ள குகைத்தளத்தில் பல படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் மிகவும் தொன்மையான கல்வெட்டு ஒன்றுள்ளது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டில் "[illegible] மகன் பெருங்கீரன்" என எழுதப்பட்டுள்ளது.

[illegible] கல்வெட்டுகள் தென்புறக் குகைத் தளத்தில் உள்ளன. இங்கு சில படுக்கைகளின் தலையணையில் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் பாறையின் மேல் முகட்டில் உள்ளன.

# கல்வெட்டு

1. மூதா அமண்ணன் யாற்றூர் செங் காயபற்...கோ ஆ...ல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்கோ ளங்கோ ஆகி அறுபித கல்.
2. மூதா அமண்ணன் யாற்றூர் செங் காயபன் உறைய் கோ ஆதன் செல் லிரும்பொறை மகன் பெருங்கடுங் கோன் மகன் இளங்கடுங்கோ இளங் கோ ஆகி ஆறுத்த கல்.
3. யாற்றூர் செங்காயபன்............
4. கொற்றந்தைள எய் மூன்று
5. கருவூர் பொன் வாணிகன் நத்தி அதிட்டாணம்
6. நல்லிபி ஊர் பிடந்தை மகள் கீரன் கொற்ற.........
7. நல்பி ஊர் பிடன் குறும் மகள் செயிபித பளி.

இன்னும் சில கல்வெட்டுகள் சிதைந்துள் ளன. கி.பி. முதல் நூற்றுண்டைச் சார்ந்த இக்கல்வெட்டுகளிலிருந்து பல அரிய செய் திகளை நாம் அறிகிறோம்.

இதில் ஒரு பொன்வாணிகன் கருவூரைச் சேர்ந்தவனைக் குறிக்கப்பெறுகிறுன். கரு வூர் இங்கிருந்து பத்துக்கல் தொலைவிற் குள்ளாகவே உள்ளது என்பது சிறப் பாகும். கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும் அது சேரர்களின் தலைநகராயிருந்தது என்றும் குறிக்கும் அகநானூற்றுச் செய்யுள் கீழே தரப்பட் டுள்ளது.

"கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியல் நகர் கருவூர் முன்துறை"

இங்கு 1. கோ ஆதன் சேரலிரும்பொறை, 2. அவன் மகன் பெருங்கடுங்கோ, 3. அவன் மகன் இளங்கடுங்கோ என்ற மூன்று மன் னர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். இந்த கல் வெட்டு பெருங்கடுங்கோ காலத்தது. அவ னது மகன் இளங்கோப் பட்டம் எய்திய போது யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமணப் பெரியாருக்குப் பள்ளிய மைத்துக் கொடுத்ததை இது குறிக்கிறது.

இந்த கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கோ ஆதன் செல்லிரும்பொறை செல்வக் கடுங்கோ வாழி ஆதன் ஆகும். பெருங் கடுங்கோ என்பவனே பாலை பாடிய பெருங்கடுங்கோ. இவனே கோப்பெருஞ் சேரல்லிரும்பொறை. இளங்கடுங்கோ என்பவனே மருதம் பாடிய இளங் கடுங்கோ. இவனே இளஞ்சேரல்லிரும் பொறை. புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ள மூன்று அரசர்களும் பதிற்றுப் பத்து 7,8,9-ம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்களாவர்."

புறப்பாட்டில் (11) பேய்மகள் இளவெயினி 'பாலை பாடிய பெருங்கடுங்கோவைப்' பாடியுள்ளார். அதில் பெருங்கடுங்கோ ஆன்பொருநை ஆற்றங்கரையில் இருந்த வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டவன் எனப் பாடுகிறார்.

"தண் பொருநைப் புனல் பாயும்
விண் பொரு புகழ் விறல் வஞ்சி."

பாலை பாடிய பெருங்கடுங்கோ கருவூரில் இருந்து ஆண்டவன் எனக் கண்டோம். அக்கருவூர் திருச்சிக் கருவூரே என்பது புகளூர்க் கல்வெட்டால் வெளிப்படை.

# சங்கச் சேர தலைநகர் கரூர்

சேர மன்னர்களின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன். இவன் மகன் யவனரை வெற்றி கண்டான். இவன் யவனர்கள் தமிழகத்திற்கு வந்த காலத்தில்தான் ஆண்டிருக்கவேண்டும். இங்கு யவனர்கள் எனக் குறிக்கப்படுபவர் ரோமானியரே. இவர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டது கி.மு. முதல் நூற்றாண்டில்தான். நெடுஞ் சேரலாதன், செங்குட்டுவன் முதலியோரது காலத்தைக் கவனிக்கும்போது உதியஞ்சேரல் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவன் எனக் கொள்வதில் தவறில்லை. ஆதலின் கருவூர்-வஞ்சி, கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் ஒரு சிறந்த தலைநகராகத் திகழ்ந்தது என்பது தெளிவு.

உதியஞ்சேரலுக்குப் பின்னர் வந்த அனைத்துச் சேரர்களும் கருவூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டிருக்கிறார்கள்.

# வழி தவறிய யானை

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற அரசன் கருவூரில் இருந்து ஆண்டான். அவன் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருடன் வேண்மாடத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் தன் யானை மீதமர்ந்து கருவூரிடம் வருவதைக் கண்டான். சோழன் யானை மதம் பிடித்து வழி தவறிக் கருவூர் வந்தது; அதைத் தவருகக் கருதிச் சோழனைக் கொன்று விடப் போகிருன் என்று கருதி உடன் இருந்த புலவரான முடமோசியார் உண்மையை எடுத்துரைத்ததாகப் புறப்பாட்டு ஒன்று கூறுகிறது. இதிலிருந்து கருவூர் சோழ நாட்டின் எல்லைக்கு வெகு அண்மையில் இருந்தது எனத் தெரிகிருேம்.

# நெடுஞ்செழியன் வென்ற கரூர்

சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும் கருவூரைத் தலைநக ராகக் கொண்டு ஆண்டான் என்று அறிகி ரோம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தனது மாற் றரசர்களை அவர்களது தலைநகரில் தோற் கடித்தான். மாந்தரஞ்சேரலிரும்பொறை, பாண்டியன் நெடுஞ்செழியனால் சிறைப் படுத்தப் பட்டான். பின்னர் சிறையிலி ருந்து நீங்கி மீண்டும் தன் அரியணை ஏறி னான் (புறம் 17). இவன் பாண்டியனால் பிணிக்கப்படும் முன்னர் மிகவும் வலியுள்ள வனாய் இருந்தான். இவன் சிறையிலிருந்த போதும்கூட இவனது பகைவர் அஞ்சினர் என இப்பாடல் கூறுகிறது. வலிமைமிக்க மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கும், பாண் டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் போர் நடந்தது. நெடுஞ்செழியன் சேரனைக் கருவூரிலேயே தோற்கடித்துக் கைது செய்திருக்க வேண் டும். இருப்பினும் சேரன் மீண்டும் தன் ஆட்சியை நிலைநிறுத்தியிருக்கிறான். கருவூர் பாண்டியன் ஆட்சியிலிருந்து மீண்டது

# கரூர் முற்றிய கிள்ளி

சோழன் நலங்கிள்ளியும் கருவூரைக் கைப்பற்றினன். அவனைப் பாடும் கோவூர் கிழார் அவன் பூவா வஞ்சியையும் தருகுவன் எனக் கூறுகிருர். இதை உரையாசிரியர் 'பூவா வஞ்சியென்பது கருவூருக்கு வெளிப் படை' எனக் கூறுகிருர்.

கருவூர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் முற்றுகையிடப்பட்டது. ஆலத்தூர் கிழார் இதைச் சிறக்கப் பாடியுள்ளார். இம்முற்றுகையின்போது சேரன் தன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. சோழர் படை கருவூர்க் காவற் காடுகளை அழித்தது. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்கள் ஆன் பொருநையாற்றின் மணலைச் சிதைத்தன. சோழன் வஞ்சிமாநகரை வாட்டுவதை நேரில்கண்ட ஆலத்தூர்க் கிழார் புறம் 36-ல்

'......சிலம்பில் குறுந்தொடி மகளிர் பொலஞ் செய் கழங்கில் தெற்றியாடும் தண்ணான் பொருநை வெண்மணல் சிதைய' எனப் பாடுகிருர்.

கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்த போது அதை நேராகக் கண்ட மற்ருெரு

புலவரான மாறேக்கத்து நப்பசலையாரும், சோழன் ஆற்றலைப் பாடியுள்ளார் (புறம் 37-39). அப்பாடலில் கருவூரைச் சுற்றி ஆழ்ந்த அகழிகள் இருந்தன. அவற்றில் நீர் மிகுந்திருந்தது. அவற்றில் முதலைகள் சுற்றித் திரிந்தன. அவ்வூரை நீ அழிக்கிறாய் 'சேரனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை' எனவும் பாடியுள்ளார்.

'இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்
தொலைய; வாடா வஞ்சி
வாட்டு நின் பீடு'

எனப் பாடுகிறார். இக்கருவூர்ப் போரில் சேரன் தோற்றான்.

குராப்பள்ளியில் துஞ்சிய கிள்ளிவளவனும் கருவூரை கைப்பற்றியிருக்கிறான். புறப்பாட்டு 373, குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் எறிந்தானைக் கோவூர் கிழார் பாடியது. இப்பாட்டில்,

பெருஞ்சேரலிரும்பொறை தகடூர் மீது படையெடுத்தான். அப்படையெடுப்பு கருவூரிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும்.

# செங்குட்டுவன் தலைநகர் கரூர்

சேரன் செங்குட்டுவனின் தலைநகர் வஞ்சியே என்பதில் ஐயமில்லை. செங்குட்டுவனை காவிரியாற்றோடு ஆன்பொருநையும், குடவனாறும் கலக்கும் கூடல் போன்றவன் என்று பரணர் பதிற்றுப் பத்தில் பாடுகிறார். கூடல் என்பது இப்பொழுது கருவூரிலிருந்து ஆறு கல் தொலைவில் உள்ளது. ஆதலின் அதன் புகழ் பாடப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆன்பொருநையாறு காவிரியாற்றில் கலக்கிறது என்பது தெளிவு. இதுவே இப்பொழுது ஆம்பராவதி என்று அழைக்கப்படுகிறது. செங்குட்டுவன் ஆண்ட வஞ்சி ஆன்பொருநைக் கரையில் இருந்தது எனச் சிலம்பு கூறுகிறது.

"வாழியரோ வாழி வருபுனல்
நீர் ஆன்பொருநை
சூழ் தரும் வஞ்சியார் கோமான்
தன் தொல் குலமே."

—சிலம்பு—வாழ்த்து-4.

ஆதலின் சேரன் செங்குட்டுவன் ஆண்டதும் கரூரே என்பதில் ஐயமில்லை.

# கரிகாலனைக் காத்த கருர்

சங்க காலச் சேரர்களுக்குப் பின்னர் கருர் சிலகாலம் சோழராட்சிக்குட்பட்டு இருந்தது. புகழ்ச் சோழர் இதை ஆண்டிருக்கிறார் என்று பெரியபுராணத்தில் இருந்து அறிகிறோம்.

கருர் சோழர்களின் குல மரபின் முதல் தனிநகர் எனக் கூறப்படுகிறது. சோழரின் தனிநகர் உறையூர். கருர் அவ்வாறு குறிக்கப்பட காரணம் என்ன? சோழர்களில் சிறந்தோனான கரிகாலனைச் சிறுவயதில் பகைவர்களிடமிருந்து காப்பதற்காக அவனது தாய் மாமன் அவனைக் கருரில் வைத்துக் காத்தான் என்றும், அங்கிருந்து அவன் முடிசூடினான் என்றும் செவிவழிக் கதை ஒன்று உண்டு. இக்கதையிலிருந்து சில உண்மைகளை அறியலாம். சோழ நாட்டில் கரிகாலனுக்கு ஆபத்து நேர்ந்த போது சேர மன்னர்கள் தஞ்சம் அளித்துள்ளனர். தங்களது தலைநகரில் அவனை வைத்துக் காக்க உதவியுள்ளனர். கருரிலிருந்து கரிகாலன் சோழ அரியணை ஏறியதால் கருரைச் சோழர்குல மரபின் தனிநகர் எனக் குறிப்பர்.

# புகழ்ச் சோழர்

கரூர் சோழராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை எறிபத்தர் வரலாற்றிலும் சேக்கிழார், 'மன்னிய அநபாயன் சீர்மரபின் மாநகரமாகும்' தொன்னெடுங் கரூர் என்று கூறுகிறார்.

இவ்வளவு சிறந்த நகரம் தேவர்களது தலைநகராம் அமராவதியையும் தோற்கடிக்கும் வண்ணம் திகழ்ந்தது. அங்கு ஓர் அரச மாளிகை இருந்தது. அதில் அரியணையில் அமர்ந்து மாற்றார் கொணர்ந்த திறைகளை எல்லாம் புகழ்ச் சோழர் கண்டார்.

அவரது அமைச்சர்கள், அதியமான் திறை கொண்டு வரவில்லை எனக் கூறினர். அவனது அரணை தூளாக்குவீர் என அரசர் ஆணையிட்டார். சோழரது படை கரூரிலிருந்து அமைச்சர்கள் தலைமையில் புறப்பட்டு அதிகன் படையோடு பொருதது. குறும்பொறையூர் என்னுமிடத்தில் அதிகன் படை தோற்கடிக்கப்பட்டது.

"கொடிமாமதில் நீடு குறும்பொறையூர்
முடி நேரியனார் படை முற்றியதே"
என்று பெரிய புராணம் கூறுகிறது.

# சேரர் குடிபெயர்ந்தனர்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் ஆண்டான். பாண்டிய மன்னன் பல முறை சேரனை வெற்றி கண்டு சேரனின் வஞ்சியைக்கைப்பற்றினான் எனக் கூறப்பட்டுள்ளது.

சேரர்கள் கருரைத் தலைநகராகக் கொண்டு பாலக்காட்டு கணவாய் வழியாக மேலைக் கடற்கரை வரை ஆண்டனர். மேலைக் கடற்கரையில் வட புறத்தே மட்டும் இவர்களது ஆட்சி இருந்தது. தென்பகுதி ஆய் மன்னர்களிடமிருந்தது. ஆனால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சேரர்கள் மேலைக் கடற்கரையில் திருவாங்கூர்ப் பகுதியைக் கைப்பற்றிக் கன்னியாகுமரி, கோட்டாறு (நாகர்கோவில்) திருநெல்வேலி ஆகிய பகுதிகள் வரை பரவியுள்ளனர். தெளிவாகப் பார்க்கப் போனால் 7-ஆம் நூற்றாண்டில் சேரர்களது ஆட்சி முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு மிகவும் பெரும் பேரரசாகத் திகழ்ந்துள்ளது சேர அரசை இவ்வளவு பெரும் பேரரசாக மாற்றிய மன்னன் 'வில்வேலி' என்பவன்.

# பல்லவர்-பாண்டியர் மோதல்

சற்றேறக்குறைய இதே காலத்தில் பல்லவப் பேரரசு காவிரியாற்றங்கரை வரையில் தனது ஆட்சியை விரிவாக்கியது. பல்லவப் பேரரசர்களில் சிம்ம விஷ்ணு, நரசிம்மனுகிய மாமல்லன் ஆகிய இருவரும் சேரர்களைத் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். இப்போர்கள் கருவூருக்கு அண்மையில் நடைபெற்றவையா எனத் தெரியவில்லை.

ஆயினும் பல்லவர்களும் சேரர்களும் நட்புப் பூண்டனர் எனக் கொள்ளவும் இடமிருக்கிறது. வலுத்துவரும் பாண்டியப்பேரரசை எதிர்த்து இவர்கள் இணைந்திருக்க வேண்டும்.

கி.பி. 730-லிருந்து 765 வரைப் பாண்டிய அரியணையில் இருந்த தேர்மாறன் எனப் புகழ்பெற்ற மாறவர்மன் ராஜசிம்மன் இப்பகுதி மீது போர் தொடுத்திருக்கிருன். இவன் காவிரியைக் கடந்தான். மழகொங்கம் அடிப்படுத்தான். பாண்டிக் கொடுமுடி சென்றுன். அங்கு பசுபதியைப் பணிந்தான் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இராஜசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் பராந்தக நெடுஞ்சடையன் மீண்டும் இப் பகுதி மீது படையெடுத்தான். இவன் பல்லவனைக் காவிரியின் தென்கரையில் பெண்ணுகடத்தில் வென்முன். பின்னர் வடகரையில் ஆயிரவேலி அயிலூரிலும், புகழியூரிலும் அதியனை வென்முன். இப் பகுதி அதியன் கீழிருந்தது. அதியனுக்கு உதவியாகப் பல்லவனும், கேரளனும் வந்தனர். அவர்களை நெடுஞ்சடையன் வென்முன்.

புகளூர்ச் சண்டைக்குப் பிறகு அதே போரின் தொடர்ச்சியாகக் கரூரிலும் பல்லவனும் கேரளனும் பாண்டியனை எதிர்த்து தோற்றிருக்கின்றனர். இதைத் தளவாய் புரம் செப்பேடு,

"காடவனைக் கரூரில் கால் கலங்கக்
களிறுதைத்த கூடலர் கோன்"

என்று கூறுகிறது. ஆனல் இக்கரூர் வெற்றி நிரந்தரமான வெற்றியாக இல்லை. இப்போரில் முதலில் தோற்ற பல்லவ மன்னன் நந்திவர்மன் பல்லவ மல்லன் என்பவன் (733-798). ஆனல், இவன் மீண்டும் கரூரைத் தாக்கிப் பாண்டியனிட மிருந்து அதைக் கைப்பற்றியிருக்கிமுன்.

# கரூர் நடுகற்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அண்மையில் இரண்டு நடுகற்களைப் படியெடுத்துள்ளது. இரண்டும் கரூரிலேயே கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்கள் ஒன்று தமிழ் எழுத்தில் கொடுக்கப் பட்டுள்ளது. இதில் கரூர் குறிக்கப் பட்டுள்ளது. "கோ கலியன் மகன் கரூரிடை தன் ஆநிரை கொளல் எறிந்து பட்டான்" என்று அக் கல்வெட்டுக் குறிக்கிறது. மற்றைய நடுகல் சற்றுச்சிதைந் துள்ளது. ஆயினும் முதல் மூன்று வரிகள் தெளிவாக உள்ளன. அது 'ஸ்ரீவஞ்சி வேளடியான்' எனத் தொடங்குகிறது. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்விரண்டு நடுகற்களும் கரூரில் கிடைத்தவை. ஒன்று கரூர் என்றும் மற்றது வஞ்சி என்றும் குறிப்பதிலிருந்து எட்டாம் நூற்றாண்டில் இந்நகர் கரூர் என்றும் வஞ்சி என்றும் பெயர் பெற்றிருந்தது என்பது தெளிவு.

# கேரளாந்தக வளநாடு

கி.பி. 9-ம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான் என அறிகிறோம்.

முதல் இராஜராஜன் காலத்தில் இப் பகுதிக்கு கேரளாந்தக வளநாடு எனப் பெயர் சூட்டப்பட்டது. இராஜராஜன் தனது தூதனைச் சேர மன்னன் சரிவர நடத்தவில்லை என்ற காரணத்தால் ஒரே பகலில் 13 சுரங்களைக் கடந்து மலை நாட்டைக் கைப்பிடித்தான் என்று உலாக் கள் கூறுகின்றன. சேரனை வென்று கேர ளாந்தகன் எனவும் பெயர் பூண்டான். சேரன் ஆண்ட பகுதியையே கேரளாந்தக வளநாடு எனப் பெயர் மாற்றியமைத்தான்.

கருரில் இராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன், விக்ரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முத லிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

# வஞ்சி மாநகர்

வஞ்சி மாநகரான முடிகொண்ட சோழபுரம் என்றும், வஞ்சி மாநகரமான கரூர் என்றும் பசுபதீச்சுரர் கோயில் கல்வெட்டும், வஞ்சி ஸ்ரீவைஷ்ணவ ரோம் என்று அரங்கநாதர் கோயில் கல் வெட்டும், கருரான வஞ்சிமாநகர் என்று நெரூர்க் கல்வெட்டும் கூறுவதிலிருந்து 12-ம் நூற்றுண்டில் கரூர் எனவும் வஞ்சி எனவும் இது பெயர் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆதலின் கல்வெட்டுச் சான்று களிலிருந்து கி.பி. முதல் நூற்றுண்டுத் தொடங்கி 12-ம் நூற்றுண்டுவரை திருச்சிக் கரூர் கரூர் எனப் பெயர் பெற்றிருந்தது என்பது ஐயத்திற்கே இடமில்லாத செய்தி யாகும். இதற்குத் தொடர்ந்து வஞ்சி என்னும் பெயரும் இருந்தது என்பதும் தெளிவு.

# முடிவழங்கு சோழபுரம்

மூன்றாம் குலோத்துங்கனது ஆட்சி தொடங்குவதற்குச் சற்று முன்னர்க் கரூர் சேரர்களால் மீட்கப்பட்டது. ஆதலின் மூன்றாம் குலோத்துங்கன் கரூரின் மீது படை தொடுத்தான். கரூர்ப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும். இறுதியில் குலோத்துங்கன் வென்றான். அவன் மெய்க்கீர்த்தி 'கரூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட' என்று கூறுவதிலிருந்து அவ்வெற்றியைக் குலோத்துங்கன் எவ்வளவு சிறப்பாகக் கருதினான் என்பது தெளிவு. கொங்குநாடு சோழ கேரள மண்டலம் எனப் பெயர் பெற்றது. சேரன் குலோத்துங்கனை வணங்கினான். அவனது முடி வழங்கப்பட்டது. கரூர், முடிவழங்கு சோழபுரம் எனப் பெயர் பெற்றது.

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் போசளர்கள் இங்கு வந்துள்ளனர். சுந்தர பாண்டியன், வீரபாண்டியர் இவர்கள் கல்வெட்டு இப்பகுதியில் காணப்படுகின்றன. பின்னர் இது மதுரை நாயக்க மன்னர்களின் கீழ் இருந்தது. சொக்கலிங்க நாயக்கர் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன,